29.7.2019.
அசல் வழக்கு எண். 159-2016

வா.சா.1 கிருஷ்ணமூர்த்தி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் பரிகாரம் கோரியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் என் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். மேற்படி எதிர்வழக்குரையில் பிரதிவாதிகளின் முன்னோருக்கும் அவரது முன் பாத்தியஸ்தர்களுக்கும் சொத்து எப்படி பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தும் அதனுடன் சேர்ந்த சொத்தும் ச.எண்.530-சி என தாக்கலாகி வந்தது என்றால் சரிதான். ச. எண்.530-சி 2ஏக்கர் 8 செண்டு என்றால் சரிதான். பின்னர் ச.எண் 530-சி கீழ்புரம் 1 ஏக்கர் 4 செண்டு என்றும் மேல்புரம் 1 ஏக்கர் 4 செண்டு என்றும் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். கீழ்புரம் 1 ஏக்கர் 4 செண்டு நிலமானது ச.எண்.248-4 என்றும் மேல்புரம் 1 ஏக்கர் 4 செண்டு நிலமானது 248-3 எனவும் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கீழ்புறம் உள்ள 1ஏக்கர் 4 செண்டு இடம் கிரையம் பெறப்பட்டுள்ளது. வா.சா,ஆ.1 ஆவணத்தில் கீழ்புரம் ˙1 ஏக்கர் 4 செண்டு என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்குமால்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழக்குபுர நான்குமாலாக யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர் ஆவணத்தை பார்த்து கூட்டு எழுத்தாக உள்ளதால் எனக்கு தெரியவில்லை என்று சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணமானது ˙ குறிப்பாக கீழ்புரம் 1 ஏக்கர் 4 செண்டு குறிக்கும் என்று சொல்ல முடியாது என்றால் சரிதான். ச.எண்..530-சி-யில் கண்ட 2 ஏக்கர் 8 செண்டு என் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பது என் வழக்கு. என் பிராதில் ச.எண்.530-சி யில் கண்ட 2 ஏக்கர் 8 செண்டும் என் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு

ஞாபகம் இல்லை. ச.எண் 248-3ல் கண்ட சொத்து என் குடும்பத்தினருக்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என்று பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் பிராதில் 1பகுதி கிரையம் பெற்றதாகவும் மற்ற பகுதி பூர்வீக பாத்தியப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளது ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை.. வா.சா.ஆ.2 ஆவணத்தில் வீரனின் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வீரனன் என் தந்தை ஆவார். எதன் அடிப்படையில் வா.சா.ஆ.2 ஆவணம் என் தகப்பனார் பெயரில் வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணம் 1 ஏககர் 4 செண்டு என்பதற்கு பதிலாக 92 செண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. ஸ்தலத்தில் 2 ஏக்கர் 8 செண்டு நிலம் உள்ளதா என்றால் நா ன் அளந்து பார்க்காததால் எனக்கு தெரியவில்லை. நானும் என் சகோதரரும் சொத்துக்களை பிரித்தகாலத்தில் அளந்து பிரித்துக் கொண்டோமா என்றால் அளந்து தான் பிரித்துக் கொண்டோம். 1994-95 காலதங்களில் தாவா இடத்தை அளந்த போது ச.எண் 248-3ல் கண்ட விஸ்தீரணம் 1 ஏக்கராகவும் ச.எண்.248-4ல் கண்ட சொத்து 4 செண்டாகவும் இருந்தது. தாவா சொத்தின் விஸ்திரணம் குறைவாக ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது சம்பந்தமாக நடவடிக்கை ஏதாவது நான் மேற்கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து களை நானும் என் சகோதரரும் அளந்து பார்க்கவில்லை என்றும் அதனால் தான் வழக்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் பாட்டனார் வீரனன் பெயரில் பட்டா ஏற்பட்டதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் பாட்டனார் வீரனனுக்கு என்ன விஸ்தீரணம் பாத்தியப்படுகிறதோ அது தான் எங்களையும் பாத்தியப்படுத்தும் என்றால் சரிதான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை அங்கப்பதேவர் கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி அங்கப்பதேவருக்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் எனக்கு நினைவில்லை என்றும் சாட்சி

பின்னர் கிரைய பாத்தியம் என்று சொன்னார். அழகாசாரி என்பவரிடம் இருந்து அங்கப்பத்தேவர் கிரையம் பெற்றுள்ளார். அழகாசாரி கிரையம் பெற்றது 27.2.1890 தேதி என்றால் சரிதான். 27.2.1890 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் பிவா.சா.ஆ.1. பிவா.சா.ஆ.1 ஆவணம் பற்றி எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ச.எண்.403-சி ல் கண்ட 1ஏக்கர் 4 செண்டு நிலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பிவா.சா,ஆ.1 ஆவணத்தில் கிழக்கு நான்குமாலாக நாகம்மாள் புஞ்சைக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வீராயி புஞ்சைக்கும் நாகம்மாள் புஞ்சைக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வீராயி புஞ்சை மற்றும் நாகம்மாள் புஞ்சைக்கும் மேற்கு தான் 1 ஏக்கர் 4 செண்டு என்றால் சரிதான். பிவா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள 1 ஏ 4 செண்டு நிலமானது மேல்புரம் உள்ள 1 ஏ 4 செண்டு நிலத்தை குறிக்கும் என்றால் சரியல்ல.

( மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)